# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
# வத்திராயிருப்பு

**சிசி. எண். 155/2024**

அ.சா.1 – முத்துராஜா

தேதி – 08.05.2025

**(எதிரி ஆஜர்)**

**குறுக்கு விசாரணை :**

அமச்சியார்புரம் காலனிக்கும் வத்திராயிருப்பிற்கும் எத்தனை கிலோ மீட்டர் இருக்கும் என்றால் 5 கிலோ மீட்டர் இருக்கும். நான் B.A., economics வரை படித்துள்ளேன். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டத் தெரியும். எனக்கும் ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் முன் பகையிருந்து வந்தது என்றால் இல்லை. ஆஜர் எதிரியின் தங்கையை நான் கூட்டி சென்று கோவிலில் வைத்து தாலி கட்டினேன் என்றால் தாலி கட்டினேன். இது சம்மந்தமாக விருதுநகர் சமூக நலத்துறையில் பேசி சமாதானம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். 17.03.2022ம் தேதி சுமார் 7.30 மணிக்கு அமச்சியார்புரம் தெருவில் உள்ள கோவிலில் உட்கார்ந்து கொண்டு போன் பேசிக் கொண்டிருந்தேன் என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் உட்கார்ந்திருந்தேன் போன் பேசவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 17.03.2022ம் தேதி சுமார் இரவு 7 மணிக்கு இராஜபாளையம் சக்திபாலா மருத்துவமனையில் வைத்து மருத்துவர் பாலசுப்பிரமணியன் எனக்கு ஏற்பட்டிருந்த காயத்திற்கு சிகிச்சை அளித்தார் என்று சொன்னால் சரிதான். எத்தனை மணிக்கு முதல் சிகிச்சைக்காக வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை. காயம் பெரிதாக இருந்ததால் கட்டு போட்டுவிட்டு இராஜபாளையம் சக்திபாலா மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். சாட்சி முத்தையா எனது தந்தையின் தம்பி ஆவார். சாட்சி முத்தம்மாள் முத்தையாவின் மனைவி. சாட்சிகள் ரதமணி, கருப்பசாமி, லிங்கசாமி, முத்துக்குமார் ஆகியோர்கள் எனக்கு உறவினர்கள் என்றால் இல்லை. சாட்சி லிங்கசாமியின் வீட்டிற்கு அருகில் தான் சம்பவம் நடைபெற்றது. 17.03.2022ம் தேதி மாலை அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தி இராஜபாளையம் சக்திபாலா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எங்களுகும் ஆஜர் எதிரிக்கும் இடையேயான முன்விரோதத்தின் காரணமாக தூண்டுதலின் பேரில் எதிரியின் மீது புகார் கொடுப்பதற்காக வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் 8.30 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எதிரி

அருவாள் வைத்து என்னை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. (சாட்சி தன்னுடைய இடது கையில் சுண்டுவிரல் உணர்ச்சியற்று இருப்பதாகவும், தலையின் மூளையில் அறுவை சிகிச்சை செய்திருப்பதாகவும் கூறினார்.) எதிரிக்கும் எங்களுக்கும் இருந்த முன்விரோதத்தின் காரணமாக உறவினர்களை சாட்சியாக வைத்து விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு எதிரி அரிவாளால் தாக்கினார் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அமச்சியார்புரம் தெருவில் உள்ள கோவிலில் வைத்து சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை .**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு